රාජ්‍ය සේවා, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
Ministry of Public Services, Provincial Councils and Local Government

ඒකාබද්ධ සේවා අංශය | இணைந்த சேவைகள் பிரிவு | COMBINED SERVICES DIVISION

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. | சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. | Independence Square, Colombo 07, Sri Lanka

දුරකතන தொலைபேசி:(94) 011- 2694560 Telephone
ෆැක්ස් தொலைநகல்:(94) 011- 2692254 Fax
ඊ-මේල් மின்னஞ்சல்:dgcs@pubad.gov.lk E-mail
වෙබ් අඩවිය இணையத்தளம்: www.pubad.gov.lk Web Site


මගේ අංකය எனது இல My No: CS/DOS/Policy/03/05(II)
ඔබේ අංකය உமது இல Your No:
දිනය திகதி: Date: 2021.12.16

சகலஅமைச்சுக்களின் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்ட செயலாளர்கள்
பிரதேச செயலாளர்கள்

**<u>அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்வாங்கப்படுவதற்கு விருப்பம் தெரிவித்த உத்தியோகத்தர்களின் தாபனச் செயற்பாடுகள் தொடர்பாக</u>**

1774/31 ஆம் இலக்க 2012.09.07 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலின் மூலம் திருத்தப்பட்டவாறான 1745/11 ஆம் இலக்க 2012 பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைப் பிரமாணக் குறிப்புக்கு உளவாங்கப்படுவதற்கு விருப்பம் தெரிவித்த உத்தியோகத்தர்களின் உள்வாங்கல் செயற்பாடுகள் தற்போது பூர்த்தியடைந்து வருவதுடன் அந்த உத்தியோகத்தர்களின் பதவிப் பெயர், விருப்பத்தை வாபஸ் பெறுதல் போன்ற விடயங்கள் தொடர்பில் அடிக்கடி கேள்விகள் கேட்கப்படுகின்றன.

02. **<u>உள்வாங்கப்படும் உத்தியோகத்தர்களின் பதவிப் பெயர்</u>**

i) 10/2012 ஆம் இலக்கப் பொது நிருவாகச் சுற்றறிக்கையின் 2 ஆம் பந்திக்கு இணங்க அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்வாங்கப்படுவதற்கு விருப்பம் தெரிவித்த உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளவாங்கப்பட்ட பின்னரும் அவர்கள் வகிக்கும் பதவிப் பெயர் மாற்றமடையாதிருக்கும். எனினும், அப்பதவிகளுக்கு அனுமதிக்கப்பட்ட பதவியணியில் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்குரிய பதவிகளாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அனுமதி பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உதாரணம்: உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சில் சேவையில் இணைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் ஒருவர் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் இணைவதனால் அவருடைய பதவிப் பெயர் மாற்றமடையமாட்டாது. இங்கு உத்தியோகத்தரின் பதவியும் பெயரும் பின்வருமாறு காட்டப்பட வேண்டும்.

பதவி: அபிவிருத்தி ஒருங்கிணைப்பாளர்
சேவை : அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை

ii) அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்வாங்கப்படுவதற்கு விருப்பம் தெரிவித்த உத்தியோகத்தரொருவர் வேறு சேவை நிலையமொன்றுக்கு இடமாற்றம் பெறுகின்ற சந்தர்ப்பத்தில் அந்தச் சேவை நிலையத்திலுள்ள பதவிகளின் அடிப்படையில் பதவிப் பெயர் மாற்றமடையும்.

உதாரணம்: உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சில் சேவையில் இணைக்கப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்வாங்கப்படுவதற்கு விருப்பம் தெரிவித்துள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவைத் திணைக்களத்தின் சிறுவர் உரிமைகள் ஊக்குவிப்பு உத்தியோகத்தர் பதவிக்கு இடமாற்றம் பெறுகின்ற சந்தர்ப்பத்தில் அந்த உத்தியோகத்தரின் பதவியும் சேவையும் பின்வருமாறு காட்டப்பட வேண்டும்.

பதவி: சிறுவர் உரிமைகள் ஊக்குவிப்பு உத்தியோகத்தர்
சேவை : அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை

**03. <u>அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்வாங்கப்படுவதற்கு விருப்பம் தெரிவிக்கும் உத்தியோகத்தர்கள் அந்த விருப்பத்தை பின்னர் வாபஸ் பெற முடியாமை</u>**

2017.05.23 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட අමප/17/0759/734/015 ஆம் இலக்க 2017.05.31 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கு இணங்க அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்வாங்கப்படுவதற்கு விருப்பம் தெரிவிக்கும் உத்தியோகத்தர்கள், அந்த விருப்பத்தை பின்னர் வாபஸ் பெற முடியாது என்பதனால் அத்தகைய கோரிக்கைகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க முடியாது.

**04. <u>உள்வாங்கப்படுவதற்கான ஆவணங்களை உரிய முறையில் சமர்ப்பிக்காமையின் காரணத்தினால் தரமுயர்வு/ஓய்வு பெறச் செய்தல் உள்ளிட்ட தாபனச் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாமை.</u>**

அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைப் பிரமாணக் குறிப்புக்கு உள்வாங்கப்படுவதற்கு விருப்பம் தெரிவித்த உத்தியோகத்தர்களில் பெருந்தொகையானோர் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்வாங்கப்பட்டிருந்த போதிலும், அவர்களில் கணிசமான தொகையினர் உள்வாங்கப்படுவதற்குத் தேவையான ஆவணங்களை இணைந்த சேவைப் பிரிவுக்கு அனுப்பாமையினால் அவர்களை உள்வாங்கும் செயற்பாடுகளுடன் தொடர்புடைய அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதுள்ளது.

அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைப் பிரமாணக் குறிப்புக்கு உள்வாங்கப்படுவதற்கு விருப்பம் தெரிவித்த உத்தியோகத்தர்களின் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைகள் தொடர்பான செயற்பாடுகள், தரப்படுத்தப்பட்ட தரமுயர்வு, சேவையிலிருந்து ஓய்வுபெறுதல் போன்ற அனைத்துச் செயற்பாடுகளும் இணைந்த சேவைப் பிரிவினால் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன் உள்வாங்கப்படுவதற்குத் தேவையான ஆவணங்களை உரிய முறையில்

சமர்ப்பிக்காமையியனால் மேற்குறித்த தாபனச் செயற்பாடுகள் உரிய முறையில் மேற்கொள்ப்படாமையினால் இந்த உத்தியோகத்தர்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். **குறிப்பாக இத்தகைய உத்தியோகத்தர்களை உரிய திகதியில் ஓய்வுபெறச் செய்ய முடியாமையினால் அவர்களின் ஓய்வூதியங்களை தயாரிக்கும் செயற்பாடுகள் தாமதமடைந்துள்ளன.**

மேலும், அபிவிருத்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்வாங்கப்படுவதற்கு விருப்பம் தெரிவித்துள்ள, எனினும் ஏற்கனவே வேறு பதவிகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களை உள்வாங்குவதற்குத் தேவையான ஆவணங்களை உரிய முறையில் சமர்ப்பிக்காமையினால் தரமுயர்வுக் கடிதங்களையும் முறையாக விடுவிக்கும் கடிதங்களையும் வழங்கும் செயற்பாடு தாமதமடைந்துள்ளதுடன் அந்த உத்தியோகத்தர்களின் புதிய பதவிக்குரிய சம்பளங்களைத் தயாரிக்கும் போது தாபனவிதிக் கோவையின் VII ஆம் அத்தியாயத்திற்கு இணங்க உரிய சம்பளப் படிமுறையில் வைக்கப்படுவதில்லை என்றும் அவதானிக்கப்பட்டுள்ளது.

05. அதனால் உங்கள் நிறுவனங்களில் பணிபரியும் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைப் பிரமாணக் குறிப்புக்கு உள்வாங்கப்படுவதற்கு விருப்பம் தெரிவித்துள்ள உத்தியோகத்தர்களின் தாபனச் செயற்பாடுகளை மேலே தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு இணங்க மேற்கொள்ளுமாறும், உள்வாங்கப்படுவதற்கு விருப்பம் தெரிவித்துள்ள உரிய ஆவணங்களை இதுவரையில் சமர்ப்பித்திராத உத்தியோகத்தர்களுக்கு இது தொடர்பில் அறிவித்து உள்வாங்கப்படுவதற்குரிய ஆவணங்களை உடனடியாக எனக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மிகவும் பணிவுடன் அறியத் தருகின்றேன்.

ஒப்பம்./ எஸ். ஆலோகபண்டார
இணைந்த சேவை பணிப்பாளர் நாயகம்